வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
Wentworthville Tamil Study Centre Inc
info@wtsc.org.au
www.wtsc.org.au

# பேச்சுப் போட்டி - 2024

**ஆண்டு** 8

**(போட்டி நடைபெறும் நாள் 25/05/2024)**

அனைவருக்கும் வணக்கம்.

## நேர்பட ஒழுகு.

“நேர்பட ஒழுகு” என்பதன் பொருள், ஒழுக்கம் தவறாமல் நேர்வழியில் நடப்பதாகும். ஔவையார் இதை ஆத்திசூடியில் வலியுறுத்தியுள்ளார். நல்லொழுக்கம் என்பது நன்னடத்தையைக் குறிக்கும். ஒழுக்கநெறி அனைத்து மக்களையும் நல்வாழ்விற்கு இட்டுச் செல்கிறது.

அன்பாக இருத்தல், இனியது செய்தல், செய்நன்றி பாராட்டுதல், உண்மை பேசுதல், போன்றன திருவள்ளுவர் கூறும் நற்பண்புகளாகும். இதன்வழி ஒழுகினால் நாம் நல்ல மனிதர்களாக வாழலாம். வாழ்வில் உயர்ந்த நிலையை அடையலாம்.

நன்மை இன்பத்தைத் தருகிறது. தீமை துன்பத்தைத் தருகிறது. நல்லொழுக்கம் நன்மை தரும். இதனால் இன்பம் பெருகும். அரிச்சந்திரன் என்ற அரசன் எத்தனையோ சோதனைகளிடையிலும் உண்மை பேசி ஒழுக்கம் தவறாது வாழ்ந்தார். அவரின் நேர்மை அவரது துன்பத்தை நீக்கி அவருக்கு இன்பவாழ்வை அளித்தது.

தமிழ் இலக்கியங்கள் நேர்மையையும் நீதியையும் தமிழர்களின் அறமாக வலியுறுத்துகின்றன.

எனவே மாணவர்களாகிய நாம் உண்மை பேசி, நேர்வழியில் ஒழுகுவோம்.

நன்றி. வணக்கம்.